**MCOP .No. 40/2019**

**Date : 17.04.2023**

***எ.ம.சா.1 காளிதாசன்***

***1ம் எ.த.கு.வி இல்லை.***

***2ம் எ.த.கு.வி***

ம.சா.ஆ-13ல் விபத்து ஏற்படுத்திய வாகனம் எங்கள் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த வாகனம் எங்கள் காப்பீடு கழகத்தில் காப்பீடு செய்யப்படவில்லை. எ.மா.சா.ஆ.1 வேறு வழக்கிற்கானது என்றால் சரிதான். ஆனால் அது இதே விபத்தில் தாக்கல் செய்யப்பட்ட மற்றொரு வழக்கிற்கானது ஆகும். எ.மா.சா.ஆ.1க்கும் இவ்வழக்கிற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எ.ம.சா.ஆ-2 1ம் எதிர்மனுதாருக்கு அனுப்பப்பட்டது என்றால் சரிதான். எனவே எ.மாச.ா-ஆ.2க்கும் மனுதாருக்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதார் ஏற்படுத்தியதாக கூறும் காப்பீடு சான்று எதுவும் மனுதார் வசம் இருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். எனவே 1ம் எதிர்மனுதார் பெயரில் உள்ள காப்பீட்டு சான்றினை மனுதாருடன் கோருவது சட்டப்படி ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. எங்கள் காப்பீடு கழக விசாரணை அதிகாரியிடம் சம்பவ விபத்து குறித்து அறிக்கை பெற்றுள்ளோம் என்றால் சரிதான். விசாரணை அறிக்கையில் 1ம் எதிர்மனுதாரின் வாகனம் எங்கள் காப்பீடு கழகத்தில் காப்பீடு செய்யவில்லை என சான்றளிக்கப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரின் வாகனம் வேறு எந்த காப்பீட்டு கழகத்திலும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று எதுவும் குறிப்பிடபடமாட்டாது. மோட்டார் வாகன ஆய்வாளர் முறையான ஆவணங்களை பரிசீலனை செய்து தான் அறிக்கை அளிப்பார் என்றால் சரிதான். ஆனால் ம.சா.ஆ.13 தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ13ல் எங்கள் காப்பீட்டு கழகம் குறித்து தவறாக குறிப்பிடப்பட்டது சம்பந்தமாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. 1ம் எதிர்மனுதாரின் வாகனம் எங்களது காப்பீட்டு கழகத்தில முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் காப்பீடு கழக பதிவினை முறையாக பரிசீலிக்காமல் 1ம் எதிர்மனுதாரின் வாகனம் எங்கள் காப்பீட்டு கழகத்தில் காப்பீடு செய்யப்படவில்லை என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதார் இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டுள்ளார் என்றால் சரியல்ல. மனுதாருக்கு இழப்பீடு தொகை கொடுக்ககூடாது என்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே மனுதாருக்கு நாங்கள் தான் முழு இழப்பீட்டு தொகையும் வழங்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல.

**ம.வி இல்லை.**